DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.172 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : **மும்தாஜ் பேகம்** (**கிராம நிர்வாக அலுவலர்**)

(P.w.14)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது நல்லுக்குறிச்சி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 02.02.2017ல் திருச்சுழி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்த போது காலை திருச்சுழி வட்டாட்சியர் போன் செய்து உதவி இயக்குநர் கனிமவளத்துறை அவர்கள், காவல் ஆய்வாளர் திருச்சுழி, வட்ட சார்ஆய்வாளர், குறுவட்ட அளவர் ஆகியோர் குற்ற வழக்கிற்காக சர்வே எண்.400/1, 400/2, 400/3A புலத்தணிக்கை வருவதாகவும், என்னையும் அவர்களுடன் செல்லுமாறு கூறினார். நானும், மேற்கண்ட அலுவலர்களும் அன்றைய தினமே 11, 12 மணியளவில் மேற்கண்ட சர்வே எண்கள் உள்ள இடத்தை சென்று பார்த்தபோது

மேற்படி சர்வேஎண்களின் நான்குமால்களை எங்களால் நிர்ணயம் செய்ய முடியவில்லை. அப்போது உதவி இயக்குநர் சுற்றியுள்ள இடங்களை அளந்து கற்களை ஊன்றி விட்டு தன்னை அழைக்குமாறு கூறிவிட்டு சென்றுவிட்டார். நானும், திருச்சுழி நிலஅளவையர் மேற்கண்ட சர்வே எண்களை அளந்து கற்களை ஊன்றி முடித்த பிறகு 10.02.2017ல் நான் உதவி இயக்குநர் கனிமவளத்துறை அவர்களுக்கு காலை போன் செய்து மேற்கண்ட சர்வே எண்களுக்கு அளந்து கல் ஊன்றப்பட்டுவிட்டது என்ற தகவலை கூறினேன். மேற்கண்ட அலுவலர்கள் அனைவரும் 10.02.2017 அன்று காலை 10.00 மணிக்கு மேலே கண்ட சர்வே எண்கள் உள்ள இடத்திற்கு வந்துவிட்டார்கள். நானும் அங்கு இருந்தேன். சர்வே எண்.400/2ல் இரண்டு குழிகள் இருந்தது. 400/3A2ல் ஒரு பள்ளம் இருந்தது. 400/3B2ல் 2 பள்ளம் இருந்தது. சர்வே எண்கள் 401, 402லும் குழிகள் இருந்தது. குண்டாற்று ஆற்றுப்படுகையான சர்வே எண்.390லும் 5 பள்ளங்கள் இருந்தது. சர்வே எண்.401ல் 10,800 கனமீட்டர் அளவில் பள்ளம் இருந்தது. சர்வே எண்.402ல் 28,800 கனமீட்டர் அளவில் பள்ளம் இருந்தது. சர்வே எண்.390ல் 15,190கனமீட்டர் அளவில் பள்ளம் இருந்தது. சர்வே எண்.400ல் மொத்தம் 12,625 கனமீட்டர் அளவில் பள்ளம் இருந்தது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி.**

வட்டாட்சியர் எனக்கு எழுத்துப்பூர்வமான உத்தரவு கொடுத்தாரா என்றால் இல்லை. சர்வே எண்களையும் வட்டாட்சியர் போனில் தான் சொன்னாரா என்றால் ஆமாம். இந்த சர்வேஎண் சம்பந்தப்பட்ட வருவாய் ஆவணங்கள் என்வசம் தான் அப்போது இருந்ததா என்றால் ஆமாம். 02.02.2017ம் தேதி இடத்திற்கு செல்லும் போது வருவாய் ஆவணங்களை கொண்டு சென்றேனா என்றால் புலவரைபடம், அ பதிவேடு, கிராம வரைபடம் ஆகியவற்றை கொண்டு சென்றேன். மேற்படி ஆவணங்களில் அந்த இடம் யார் பெயரில் உள்ளது என்று குறிப்புகள் இருக்குமா என்றால் அ பதிவேட்டில் இருக்கும். சர்வே எண்.400/1, 400/2, 400/3A யார் பெயரில் உள்ளது என்று பார்த்தேனா என்றால் பார்த்தேன்

ஆனால் தற்போது ஞாபகமில்லை. மேற்படி சர்வே எண்கள் யார் பெயரில் உள்ளது என்ற விபரம் காவல் ஆய்வாளரிடம் எழுத்துப்பூர்வமாக கொடுத்தேனா என்றால் இல்லை. உதவி இயக்குநர் அறிக்கையை எனக்கு அனுப்பியவுடன் தான் எவ்வளவு அளவில் பள்ளம் உள்ளது என்பது எனக்கு தெரிய வந்தது என்றால் இல்லை, என் முன்னிலையில் தான் அளந்து கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கிய ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் எங்கு, எப்போது வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் 10.02.2017ம் தேதி மாலை 5 முதல் 6 மணிக்குள் கிராம நிர்வாக அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். உதவி இயக்குநர் இடத்தை அளந்து கல் ஊன்றுமாறு சொன்னதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில், அதனை யாரெல்லாம் சேர்ந்து அளவீடு செய்தோம் என்றால் நானும், இரண்டு தலையாரி மற்றும் சர்வேயர் இரண்டு பேர் சேர்ந்து அளவீடு செய்தோம். நான் சொன்ன நாள் நேரத்தில் அந்த இடத்திற்கு சென்று குழுவாக எந்தவித மதிப்பீடும் செய்யவில்லை என்றாலும், உதவி இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையில் அளவுகள் குறித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.172 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : சுப்புரத்தினம் (ஆய்வாளர் - நிலஅளவைத்துறை )

(P.w.13)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், நேஷனல் பொறியியல் கல்லூரியில் நடைபெறும் நில அளவை பயிற்சி மையத்தில் பயிற்றுனராக பணியாற்றி வருகிறேன். 02.02.2017 திருச்சுழி வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்ட சார்ஆய்வாளராக பணியில் இருந்த போது திருச்சுழி வட்டாட்சியர் அவர்களின் உத்தரவுப் படியும், திருச்சுழி காவல் ஆய்வாளர் அவர்களின் கடிதத்தின் படியும் திருச்சுழி கிராமம் புலஎண்.400, 401, 402 மற்றும் 390 ஆகியவற்றை புலத்தணிக்கை செய்ய நானும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் விருதுநகர், திருச்சுழி காவல் ஆய்வாளர்,

திருச்சுழி குறுவட்ட அளவர், திருச்சுழி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சிறப்பு வருவாய் ஆய்வாளர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோருடன் முற்பட்டோம். அன்று மேற்கண்ட புல எண்களின் எல்லைகளை சரிவர நிர்ணயம் செய்ய இயலவில்லை. ஆகையால் உதவி இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களின் அறிவுரையின் படி மேற்கண்ட புல எண்களின் எல்லைகளை நிர்ணயம் செய்து மீள மற்றொரு தேதியில் கூட்டுப் புலத்தணிக்கை செய்ய அறிவுறுத்தப்பட்டது. இதன் இடையில் மேற்கண்ட புல எண்களின் எல்லைகளை நிர்ணயம் செய்து மீண்டும் 10.02.2017 அன்று மீளவும், அதே மேற்கண்ட நபர்களுடன் காலை 10மணியளவில் புலத்தணிக்கை செய்தோம். அதில் புல எண்.400ல் சுமார் 5 இடங்களில் 12,625 கனமீட்டர் பரப்பளவில் மணல் அள்ளப்பட்டிருந்தது. புல எண்.401ல் 10,800 கனமீட்டர் பரப்பளவும், புல எண்.402ல் 28,800 கனமீட்டர் பரப்பளவும், புல எண்.390ல் அரசு புறம்போக்கு குண்டாற்றில் 15,190 கனமீட்டர் பரப்பளவிலும் மணல் அள்ளப்பட்டிருந்தது உறுதி செய்யப்பட்டது. மேற்கண்ட விபரத்தை குழுவில் இருந்த அனைவரும் கூட்டு புலதணிக்கையில் தெரிந்து கொண்டனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி.**

வருவாய் வட்டாட்சியர் என்னை அளக்க செல்வதற்கு எழுத்துப்பூர்வமாக உத்தரவு எதுவும் கொடுத்தாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. சர்வே எண்கள். 400, 401, 402, 390 ஆகியவற்றை அளப்பதற்கு எழுத்துப்பூர்வமாக உத்தரவு உள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கின் சரிதம் தொடர்பான ஆவணம் எதுவும் எனக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. சர்வே எண்.400 எத்தனை பிரிவுகளாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்பது எங்கள் கோப்புகளில் இருக்கும் என்றால் சரிதான். அளவீடு செய்வதற்கு முன்னர் சர்வே எண். 400 எத்தனை உட்பிரிவுகளாக இருந்தது என்றால் 400/1, 400/2, 400/3A, 400/3B என உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது. மேற்படி சர்வே எண்.400ல் உள்ள சொத்துக்கள் தனியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த இடத்தின்

உரிமையாளர்கள் அளவீடு செய்யும்போது வந்திருந்தார்களா என்றால் இல்லை. இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களை அவ்வப்போது சென்று அளவீடு செய்வேனா என்றால் கூப்பிடும் போது சென்று அளந்து கொடுப்போம். சர்வே எண்.400னை அதிகாரிகளுடன் அளவீடு செய்வதற்கு முன்னர் எப்போதாவது அளவீடு செய்தேனா என்றால் இல்லை. உதவி இயக்குநர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்கள் மதிப்பீட்டு கோப்புகளை எப்போது கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. காவல் துறை விசாரணையில் மேற்படி சர்வே எண்களை அளந்ததாக கூறியுள்ளேனா என்றால் நாங்கள் குழுவாகத்தான் அங்கு சென்று ஆய்வு செய்தோம். உதவி இயக்குநர் அறிக்கையில் எழுத்துப்பூர்வமாக உள்ளதை பார்த்து தான் எவ்வளவு கனஅடி எடுக்கப்பட்டது என்று முதல் விசாரணையில் சொன்னேனா என்றால் நானும், குழுவுடன் சென்றதால் எவ்வளவு எடுக்கப்பட்டது என்று தெரியும். நான் சொன்ன நாள் நேரத்தில் அந்த இடத்திற்கு சென்று குழுவாக எந்தவித மதிப்பீடும் செய்யவில்லை என்றாலும், உதவி இயக்குநரின் அறிக்கையின் அடிப்படையில் அளவுகள் குறித்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.172 /2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

Name : பிரவீனா (சார்பதிவாளர்) (P.w.12)

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை –**

1. நான் தற்போது திருப்பூர் மாவட்டத்தில் சிறப்பு சீட்டு சங்க சார்பதிவாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.03.2016ம் தேதியில் திருச்சுழி சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணியில் இருந்த போது திருச்சுழி காவல் ஆய்வாளர் சர்வே எண்.400/1, 400/2 மற்றும் 400/3A சர்வே எண்களின் வில்லங்கச்சான்றிதழ் மற்றும் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை கேட்டார்கள். 03.03.2016ல் அவர் கேட்ட ஆவண விபரங்களை பதிவுகளை சரிபார்த்து வில்லங்கச்சான்று மற்றும் அதில் உள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் ஆகியவற்றை நான் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதன்பின்னர் 31.01.2017 மேற்படி எண்களுக்கான வழிகாட்டி மதிப்பினை

காவல் ஆய்வாளர் என்னிடம் கேட்டார். அன்றைய தினமே அரசு வழிகாட்டி மதிப்பும், ஆவணங்களின் அடிப்படையில் ஏற்பட்ட உயர்மதிப்பு சம்பந்தமான ஆவணங்களை அனுப்பி வைத்தேன். ஆவண எண்.67/1995க்கான சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆவண எண்.1811/2010 க்கான சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆவண எண்.67/2016 சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண்.400/1, 400/2 மற்றும் 400/3A எண்களுக்கான வில்லங்கச் சான்றிதழ் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.04.2012ல் இருந்து அன்றைய தேதி வரை அரசு வழிகாட்டி மதிப்பு ஹெக்டேருக்கு ரூ.1,73,000/- ஆக இருந்தது என்று சான்று வழங்கினேன். ஆவணத்தின் அடிப்படையில் உயர்மதிப்பாக ஹெக்டேருக்கு ரூ.2,46,690/- இருந்தது என்று சான்று வழங்கினேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி.**

அ.சா.ஆ.2 ஆவணத்தில் எப்போது வழங்கப்பட்டது என்ற தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணம் அசல் ஆவணத்திலிருந்து நகல் எடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் 2003ம் ஆண்டிலிருந்து மென்பொருளின் ஒளிவருடலாக தான் சேர்த்து வைக்கப்படுவதால் அதிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்திலும் எப்போது வழங்கப்பட்டுள்ளது என்ற தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.4 ஆவணம் மென்பொருளின் ஒளிவருடலில் இருந்து எடுக்கப்பட்டதாக குறிப்புகள் இல்லை என்றால் அந்த ஆவணம் அதிலிருந்து எடுக்கப்பட்டது தான். அ.சா.ஆ.5 வில்லங்க சான்றிதழில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் கையொப்பம் செய்துள்ளேன். அதில் அலுவலகம் முத்திரை இல்லை என்றால் சரிதான். அரசு வழிகாட்டி மதிப்பானது அரசாங்கத்திலிருந்து நிர்ணயம் செய்து எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் தான் தற்பொழுது அந்த மதிப்பை

சொல்கிறேன் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள 7 ஆவணங்களில் நான் எத்தனை ஆவணம் காவல் துறையில் கொடுத்தேன் என்றால் குறியீடு செய்யப்பட்டுள்ள 3 ஆவணங்களை தான் கொடுத்துள்ளேன். நான் முறையாக ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1995, 2010, 2016 ஆண்டுகளில் பதிவு செய்துள்ள ஆவணங்களை காவல் துறையில் கொடுத்துள்ள நிலையில், 2017ம் ஆண்டுக்கான வழிகாட்டி மதிப்பு மட்டும் தான் கேட்கப்பட்டதா என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.